**01.10.2024**

**O.S.No. 226/2021**

**PW.1 - திரு. திருப்பதி, த/பெ. திருப்பதி கவுண்டர்**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

கிரய ஒப்பந்தம் எங்கு வைத்து போட்டோம் என்றால் வேப்பனப்பள்ளியில் ஆவண எழுத்தர் முன்பு போட்டோம். ஆவண எழுத்தர் பெயர் என்ன என்றால் பெயர் ஞாபகமில்லை, ஆளை தெரியும். தாவா கிரய ஒப்பந்த பத்திரம் வா.சா.ஆ.3ல் அதை தயாரித்தவர் பெயர் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. காலம்சென்ற ரோஷன்பீ–ன் வாரிசுகள் எத்தனை பேர் என்றால் நான்கு மகன்கள், ஒரு மகள். நீதிமன்றம் குறிப்பாக கேட்ட போது கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட ரோஷன்பீ–ன் கணவர் கலீல் உயிருடன் இருந்தார். ரோஷன்பீ–ன் சொத்துக்களுக்கு அவரது கணவரும் ஒரு வாரிசு என்றால் இருக்கலாம். ரோஷன்பீ–க்கு ஜலீல் என ஒரு மகன் இருந்தார் என்றும், அவர் விபத்தில் இறந்துவிட்டார், அவருக்கு 1 குழந்தை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் உண்மையிலேயே கிரய ஒப்பந்தம் நான் சொன்ன மாதிரி போட்டிருந்தால் மேற்படி சங்கதிகளை உறுதி செய்துக்கொண்டு கிரய ஒப்பந்தம் போட்டிருப்போம் என்றும், அவ்வாறு செய்யவில்லை என்று சொல்வதால் நான் சொன்ன மாதிரி கிரய ஒப்பந்தம் போடவில்லை என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தம் போடும் போது சல்மா இருந்தாரா என்றால் இருந்தார். இந்த ஒப்பந்தத்தில் சல்மாவின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். சல்மாவின் கையொப்பம் இல்லாததால் தாவா கிரய ஒப்பந்தம் முழுமையடையாத ஒப்பந்தம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் சொன்ன மாதிரி பிரதிவாதிகளுக்கு கிரய ஒப்பந்தம் ஏற்பட்டதாக சொன்னதில் சொல்லியிருப்பது போல் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, சாட்சிகள் உள்ளார்கள். நான் சல்மாவை அழைத்துவந்து பணத்தை வாங்கி போ என சொல்லிவிட்டு, திருப்பி அனுப்பிவிட்டேன் என்றால் சாட்சிகளோடு வந்த மஜித்திடம் (1ம் பிரதிவாதி) பணம் கொடுத்தேன். ஒரு கிரய ஒப்பந்தம் போடும் போது சம்மந்தப்பட்ட எல்லோரும் கையொப்பம் போட வேண்டும்

என்றும், இல்லையேல் அது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. சாட்சி கூடுதலாக சல்மா வந்திருந்தார் என்றும் பத்திர பதிவு அலுவலகத்தில் வைத்து கையெழுத்து போடுவதாக சொல்லிவிட்டு சென்றார் என சொன்னார். நீதிமன்றம் குறிப்பாக கேட்ட போது தாவா கிரய ஒப்பந்தம் பதிவு செய்யப்படவில்லை என சாட்சி சொன்னார். ரோஷன்பீ–ன் சொத்துக்களை அவர் இறந்த பிறகு கூட்டாக பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் ஆம். உரிமை பாத்தியதை உடைய எல்லோரும் கையெழுத்து போட்டால் தான் சொத்து குறித்த கிரய ஒப்பந்தம் சட்டப்படி செல்லுபடியாகும் என்றால் சாட்சி மௌனமாக இருந்தார். நான் சல்மாவிற்கு பணம் கொடுக்காததால் அவர் கையொப்பம் போட்டு கொடுக்கவில்லை என்றால் சரிதான். சல்மா வந்து பணம் பெற்றுக் கொள்ளவில்லை. பிரதிவாதிகள் என்னிடம் ரூ.20,000/– கடன் கேட்டார்கள் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சொல்கிறேன் என்றும், பிரதிவாதிகள் என்னிடம் கடன் கேட்க தான் வந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளிடம் அவர்களின் சகோதரியை அழைத்துவந்து கடன் வாங்கி கொள்ளுங்கள் என சொன்னேன் என்றும், அவர்கள் அழைத்து வந்த போது பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் இதுநாள் வரை என்னிடம் பணம் ஏதும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. தாவா கிரய ஒப்பந்தம் தாவா சொத்தை கிரயம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஏற்படுத்தப்படவில்லை என்றும் கடனுக்கு உறுதியளிக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. 20.04.2021 அன்று நான் அனுப்பிய சட்ட அறிவிப்பில் (வா.சா.ஆ.4) 3 நாட்கள் கால அவகாசம் கொடுத்திருக்கிறேன், அந்த 3 நாட்கள் கால அவகாசத்திற்குள் மீதி கிரய தொகையை கொடுத்து கிரயம் பதிந்துக்கொள்ளுமாறு பிரதிவாதிகளிடம் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 20.04.2021 அன்று அனுப்பிய சட்ட அறிவிப்பு 22.04.2021 அன்று பிரதிவாதிகளால் பெறப்பட்டுள்ளது என்றால் சாட்சி மௌனமாக இருந்தார். 24, 25 சனி, ஞாயிறு அடுத்த நாள் மகாவீர் ஜெயந்தி என்பதால் அரசு விடுமுறை என்றும், அதை நன்றாக தெரிந்துக்கொண்டு 3 நாட்கள் கால அவகாசம்

கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. பதில் அறிவிப்பு அனுப்ப கூடாது என்பதற்காகவே இவ்வாறு ஒருமுறையை கையாண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. உரிய கால அவகாசம் கொடுக்காமல் பெயரளவில் சட்ட அறிவிப்பு அனுப்பிவிட்டு 26.04.2021 அன்று அவசர அவசரமாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால், தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. தாவா கிரய ஒப்பந்தம் ஏற்பட்டதாக சொல்லும் போது ரூ.9,50,000/- ரொக்கமாக பெற்றுக்கொண்டு மீதி தொகை ரூ.50,000/- 11 மாதங்களுக்குள் கொடுக்க வேண்டும் என ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்வதற்கு பிரதிவாதிகளுக்கு எந்த அவசியமும் இல்லை என்றும், அவ்வாறு நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி ரூ.9,50,000/- பிரதிவாதிகள் என்னிடம் இருந்து வாங்காததால் அவர்கள் எனக்கு எந்த தொகையும் தரவேண்டியதில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தாவா சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவாவில் கோரியவாறு எந்த பரிகாரமும் நான் பெற தகுதியானவன் அல்ல என்றால் சரியல்ல. தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

M SUMATHI SAI PRIYA

Digitally signed by M SUMATHI SAI PRIYA

Principal District Judge,
Krishnagiri.